In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi

S.C.No.292/2022

Deposition of P.W.3

| | |
|---|---|
| Name | திருமதி.ஞானசௌந்தரி |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 10th day of March 2026.

(எதிரிகள் ஆஜர் .)

**முதல் விசாரணை :**

நான் வீரப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். சாட்சி பேச்சியம்மாளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன மாணிக்கராஜ்ம், ரேஷ்மாவும் ஒருவரையொருவர் காதலித்து வந்தனர். கடந்த 26.06.2022 அன்று ரேஷ்மாவிற்கு சடங்குநிகழ்ச்சி அவரது பெற்றோர் வைத்திருந்தார்கள். மாணிக்கராஜ்ம், ரேஷ்மாவும் காதலித்த விவரம் தெரிந்து எதிரிகள் எங்களை அந்த நிகழ்ச்சிக்கு அழைக்கவில்லை. சடங்கு நிகழ்ச்சிக்கு மறுநாள் ரேஷ்மா எனது அத்தை பேச்சியம்மாளின் வீட்டிற்கு வந்து தனக்கு மிலிட்டரி மாப்பிள்ளையை நிச்சயம் செய்திருப்பதாகவும், தனக்கு பிடிக்கவில்லை என்றும், மாணிக்கராஜை தான் திருமணம் செய்வேன் என்றும் பேச்சியம்மாளிடம் கூறியுள்ளார். அப்போது எனது அத்தை ரேஷ்மாவை சத்தம்போட்டுள்ளார். பின்னர் 28.06.2022 அன்று மாணிக்கராஜ்ம், ரேஷ்மாவும் வீட்டை விட்டு வெளியேறி திருமங்கலம் காவல் நிலையத்தில் திருமணம் செய்து கொண்டுள்ளார்கள். இந்த

விவரத்தை எனது அத்தை பேச்சியம்மாள் என்னிடம் கூறினார். பின்னர் மாணிக்கராஜ்ம், ரேஷ்மாவும் திருமங்கலத்தில் குடியிருந்து வந்துள்ளனர். பின்னர் 18.07.2022 அன்று மாணிக்கராஜ்ம்,ரேஷ்மாவும் திருமங்கலத்தில் வேலை இல்லாததததால் வீரப்பட்டி கிராமத்திற்கு வந்தனர். பின்னர் ஒரு நாள் எனது அத்தை பேச்சியம்மாளும், மாணிக்கராஜ்ம், ரேஷ்மாவும், அன்னமுத்து, அழகு என்பவரின் மனைவி தமிழ்செல்வி ஆகியோர் எனது அத்தை வீட்டின் முன்பாக நின்று பேசி கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் அங்கு சென்று ஓடிபோய் திருமணம் செய்து கொண்டு மீண்டும் ஊருக்குள் வந்துள்ளாயா, ஓடிபோய்விடு இல்லையெனில் வெட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியுள்ளனர். மறுநாள் காலையில் சமுதாய நலக்கூடத்தில் மாணிக்கராஜ்ம், ரேஷ்மாவும் இருந்தபோது 2 வது எதிரி மாணிக்கராஜையும், ரேஷ்மாவையும் பார்த்து ஊரை விட்டு போய்விடுங்கள், இல்லையெனில் வெட்டி கொன்று விடுவேன் என்று மிரட்டியுள்ளார். இந்த விவரத்தை ரேஷ்மா எனது அத்தை பேச்சியம்மாளிடம் கூறியுள்ளார். பின்னர் எனது அத்தை 2 வது எதிரி கோபத்தில் கூறுகிறார் என்று நினைத்து 100 நாள் வேலைக்கு சென்றுவிட்டார். பின்னர் 11 மணியளவில் எனது அத்தை பேச்சியம்மாள் வீட்டிற்கு தண்ணீர் குடிப்பதற்காக வந்தபோது அவரது வீட்டிற்குள் அலறல் சத்தம் கேட்டுள்ளது. எனது அத்தை வீட்டிற்குள் செல்லும்போது எதிரி முத்துகுட்டி எனது அத்தையின் வீட்டில் இருந்து கையில் ரத்தம்வடிந்த அருவாளுடனும், ஆடைகளில் ரத்தக்கறையுடனும் வெளியே வந்துள்ளார். எனது அத்தை அடபாவி என்னடா செஞ்ச என்று சொல்லி வீட்டிற்குள் சென்று பார்த்தபோது என்னுடைய ஒரே மகளை உன் மகனுக்கு திருமணம் செய்து வைத்து எனது சொத்தை அபகரிக்க பார்க்கிறாயா இருவரையும் வெட்டி கொன்றுவிட்டேன் என்று

கூறியுள்ளார். பின்னர் வீட்டிற்குள் மாணிக்கராஜ் வெட்டுக்காயங்களுடன் இறந்துகிடந்துள்ளார். ரேஷ்மா வெட்டுகாயங்களுடன் ரத்தவெள்ளத்தில் கிடந்துள்ளார். ரேஷ்மா எனது அத்தையிடம் தனது அப்பா மாணிக்கராஜையும், தன்னையும் வெட்டி கொன்று விட்டதாக கூறிவிட்டு கண்ணை மூடிவிட்டார். பின்னர் சத்தம்கேட்டு நான் பேச்சியம்மாள் வீட்டிற்கு சென்று பார்த்தபோது மாணிக்கராஜ் கட்டிலில் இடதுபக்கம் தலையிலும், கழுத்திலும், தோள்பட்டையிலும் வெட்டுகாயங்களுடன் இறந்துகிடந்தார். ரேஷ்மாவிற்கு வலது கழுத்தில் வெட்டுகாயத்துடன் இறந்துகிடந்தார். பின்னர் பொன்ராஜ் என்பவர் மூலமாக எனது தாத்தா சண்முகம் என்பவருக்கு தகவல் சொல்லி அனுப்பினேன். அவர் வந்தபின்னர் காவல் நிலையம் செல்வதற்காக நடந்து சென்றபோது வந்த ஆட்டோவில் ஏறி எட்டையாபுரம் காவல் நிலையம் சென்றோம். எனது அத்தை பேச்சியம்மாள் கூறிய விவரங்களை நான் மனுவாக எழுதி அதில் நானும், எனது தாத்தாவும் சாட்சி கையெழுத்து செய்தோம். மனுவை எனது அத்தை பேச்சியம்மாள் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள முதலாவது அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.3. பின்னர் தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து மாணிக்கராஜ், ரேஷ்மா பிரேதத்தின்மீது ஆய்வாளர் விசாரணை செய்தபோது நானும் சாட்சியாக இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தான் அசா.ஆ.1 புகாரை எழுதினேன் என்றால் சரிதான். புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் எதிரிகள்

மிரட்டியதாகவும், பின்னர் வீட்டிற்கு வந்து தாக்கியதாகவும் உள்ள விவரங்களை நான் கேள்விபட்டுதான் போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். சமுதாயநலக்கூடத்திற்கு அருகில் வைத்து சம்பவத்தன்று காலையில் மாணிக்கராஜ் ரேஷ்மாவை 2வது எதிரி மிரட்டி ஊரைவிட்டு போய்விட வேண்டும் என்று சொன்னதாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரம் புகாரில் இல்லை என்றால் சரிதான். புகாரை எழுதி முடித்து கையொப்பம் போட்ட பிறகு காவல் நிலையத்தில் வைத்து எனது அத்தை பேச்சியம்மாள் இந்த விவரத்தை சொன்னார். இந்த விவரத்தை போலீசாரிடம் சொல்லவில்லை. நானும் போலீசாரிடம் சொல்லவில்லை. மருத்துவமனைக்கு சென்ற இடத்திலும் இந்த மிரட்டிய சம்பவத்தை போலீசாரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பிரேதத்தை பார்த்தபிறகு 1 மணிநேரம் கழித்து காவல் நிலையத்திற்கு கிளம்பினோம். நான் பேச்சியம்மாள் வீட்டிற்கு போகும்போது நிறைய நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். சேவியர் காலனியில் வசிப்பவர்கள் பொதுவாக உறவினர்களாக இருப்பார்கள் என்றால் சரிதான். ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் வேலைக்கு போகவில்லை வீட்டில் தான் இருக்கிறேன். எனது அத்தைபேச்சியம்மாள் 100 நாள் வேலைதிட்டத்தில் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான்.

கிராமத்தில் பெரும்பாலான நபர்கள் 100 நாள் வேலைதிட்டத்தில் வேலை பார்ப்பார்கள் என்றால் சரிதான். சம்பவத்தை எனக்கு யார் சென்னார்கள் என்றால் சத்தம்கேட்டு நான் போனேன். நடந்த சம்பவத்தை என் அத்தை பேச்சியம்மாள் என்னிடம் சொன்னார். நான் என்றைக்காவது 100 நாள் வேலை திட்டத்தில்போயிருக்கிறேனா என்றால் போயிருக்கிறேன். பொதுவாக வேலைக்கு காலை 8 மணிக்கு

போய்விடவேண்டும் என்றால் சரிதான். போனவுடன் வந்திருக்கும் நபர்களைபோட்டோ எடுப்பார்கள் என்றாலும் ஒரு அட்டையில் கையொப்பம்வாங்குவார்கள் என்றாலும் சரிதான். வேலை முடிந்து போகும்போது போட்டோ எடுக்கமாட்டார்கள், கையெழுத்தும் வாங்கமாட்டார்கள். எவ்வளவு நேரம் வேலை பார்த்தோம் என்பது போட்டோஎ டுத்தால் தான்தெரியும் என்றால் சரிதான். ஆனால் அப்போது போட்டோ எடுப்பது கிடையாது. வேலைக்கு போகும்நபர்கள் சாப்பாடு தண்ணீர் கொண்டு போவார்கள் என்றாலும் வேலை முடியும் வரை வேறு எங்கும் போகமுடியாது என்றாலும் அவசரமாக இருந்தால் போகலாம், சொல்லிவிட்டு போகலாம். அன்றையதினம் எனது அத்தை வேலை முடித்து வந்தார் என்றால் சரியல்ல, அவசரம் என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துள்ளார். எனது அத்தைக்கு மகனையும், மருமகளையும் யாரோ வெட்டிவிட்டதாக தகவல் கிடைத்து தான் அவசரமாக கிளம்பிவந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ வீட்டிற்கு போகும்போது போலீசார் இருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எவ்வளவு நேரம் கழித்து போலீசார் வந்தார்கள் என்றால் நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த பிறகுதான் வந்தார்கள். வீரப்பட்டியில் இருந்து ஆட்டோவில் 20 நிமிடத்தில் போய்விடலாம் என்று சொன்னால் சரிதான். நான் பிரேதத்தை பார்த்து சுமார் 1-1/2 மணிநேரம் கழித்து காவல் நிலையத்திற்கு கிளம்பி போனோம். மாணிக்கராஜ்ற்க்கு இடதுபக்க தலை, கழுத்தில் காயம் இருந்தது. ரேஷ்மாவிற்கு கழுத்தில் முக்கால்வாசி வெட்டுபட்டு இருந்தது என்று சொன்னால் சரிதான். நான் பார்க்கும்போது ரத்தம் அதிகமாக வெளியேறி இருந்தது என்று சொன்னால் சரிதான். அதை பார்க்கும்போது வெட்டுப்பட்டு இரண்டு மணிநேரம் ஆகியிருக்கும் என்றால் சரியல்ல. ரேஷ்மாவிற்கு இறக்கும்போது என்ன வயது இருக்கும்

என்று எனக்கு தெரியாது. ரேஷ்மா இறக்கும்போது அவருக்கு 19 வயது இருக்கும் என்றால் எனக்கு தெரியாது, ஆனால் பள்ளிபடிக்கும் காலத்தில் இருந்தே மாணிக்கராஜை காதலித்து வந்தார். மாணிக்கராஜ் வயது இறக்கும்போது 28 அல்லது 29 இருக்கும் என்றால் சரிதான். ரேஷ்மா

மைனராக இருக்கும் போதிலிருந்தே காதலித்து வந்துள்ளார் என்றால் சரிதான். ரேஷ்மா பேரிலாம்பட்டி பள்ளியில் படித்தார். அது எங்கள் ஊரில் இருந்து 10 அல்லது 12 கிமீ தூரம் இருக்கும். கல்லூரி படிப்பை கோவில்பட்டியில் படித்தார். கல்லூரி படிக்கும்போது கோவில்பட்டியில் அவரது பாட்டி வீட்டில் தங்கியிருந்து படித்து வந்தார் என்றால் சரிதான். சடங்கு நிகழ்ச்சிக்கு எங்களுக்கு அழைப்பு வரவில்லை. பேச்சியம்மாள், மாணிக்கராஜ் ஆகியோர் சடங்கு நடந்த தேதியில் வெளியூர்போயிருந்தார்கள் என்றால் சரிதான். ரேஷ்மா கல்லூரிக்கு போனவர் வீட்டிற்கு திரும்பாமல் அங்கிருந்து சென்றே மாணிக்கராஜை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். சடங்குநிகழ்ச்சி நடந்த மறுநாள் ரேஷ்மா கல்லூரிக்கு போனார் என்றால் எனக்கு தெரியாது. அதன்பிறகு ஊருக்கு வரவில்லை என்றால் சரியல்ல. சடங்கிற்கு பிறகு ரேஷ்மாவை மாணிக்கராஜுடன் திருமணம் செய்து கொண்டு ஊருக்கு வந்த பிறகு தான் பார்த்தேன். நான் பேச்சியம்மாளின் தம்பி மகள் என்றால் சரிதான். மாணிக்கராஜ் வெளிநாட்டிலும், சென்னையிலும் வேலை பார்த்தார் என்றால் சரிதான். கடைசியாக 6 மாதகாலம் கீழஈராலில் தங்கியிருந்தார் வேலை பார்த்தாரா என்று எனக்கு தெரியாது. கீழஈராலில் மாணிக்கராஜ் தங்கியிருக்கும்போது அந்த ஊர் பஞ்சாயத்து தலைவரின் மகளை காதலித்ததாக பிரச்சனை வந்தது என்றால் சரியல்ல. இந்த பிரச்சனைக்கு பிறகுதான் எங்கள் ஊருக்கே மாணிக்கராஜ் வந்தார் என்றால் சரியல்ல. சங்கீதா என்ற ஒரு டீச்சரை மாணிக்கராஜ் காதலித்தார்

என்றால் சரியல்ல. ரேஷ்மாவை திருமணம் செய்தபிறகு சங்கீதா போன் செய்து மாணிக்கராஜ் உடன் பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த வீட்டிற்கு இரவு நேரத்தில் மோப்பநாய் வந்தது. அன்றையதினம் ஊரில் மதிய நேரத்தில் மழை பெய்தது எத்தனை மணி என்று தெரியாது. 1வது எதிரி சொந்தமாக லாரி வைத்துள்ளார் என்றால் சரிதான். எங்கள் ஊரில் எதிரிகள் தன்னிறைவாக வாழக்கூடியவர்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் சம்பவத்தை தவிர வேறு எந்த பிரச்சனையிலும் எதிரிகள் ஈடுபட்டது கிடையாது என்றால் சரிதான். சம்பவத்தன்று எதிரிகள் ஊரில் கிடையாது என்றால் சரியல்ல நான் பார்த்தேன். நான் எதிரிகளை ஊரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ரேஷ்மா திருமணம் முடித்து வந்தபிறகு நான் ரேஷ்மாவிடம் பேசியிருக்கிறேன். ரேஷ்மா எதிரிகளுக்கு ஒரே மகள் என்றால் சரிதான். வேறு குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான். ஒரு மகள் என்பதால் எதிரிகளுடன் பேசி சமாதானம் ஆகிதான் ஊர் திரும்பினார்கள் என்றால் சரியல்ல, சமாதானம் பேசி கொள்ளலாம் என்று ஊருக்கு வந்தார்கள். புகாரை அடித்து திருத்தி எழுதவில்லை அத்தை சொல்ல சொல்ல எழுதினேன். எத்தனை பக்க புகார் என்றால் இரண்டு பக்கங்கள் முழுமையாகவும் மற்றொரு பக்கத்தில் பாதியும் எழுதினேன். இந்த புகாரை தவிர வேறு மனு, புகார் எதுவும் எழுதியது கிடையாது என்றால் சரிதான். புகார் எனது அத்தை சொல்லி எழுதியது கிடையாது என்றாலும் போலீசார் சொல்லி எழுதி கொடுத்தது என்றாலும் சரியல்ல. நான் புகாரில் உள்ள விவரங்களை மனப்பாடம் செய்து போலீசார் அப்படியே சொல்லவேண்டும் என கேட்டுக்கொண்டதன்பேரில் அதிகப்படுத்தி சாட்சியம் சொல்லயிருக்கிறேன் என்றால் சரியல்ல. பேச்சியம்மாள் அன்றையதினம் மதியம் 3.30 மணிக்குதான் வந்தார்

என்றாலும், நாங்கள் அனைவரும் அதன்பிறகு நான் போய் சம்பவ இடத்தில் பார்த்தேன் என்றாலும் சரியல்ல. அத்தை 11 மணிக்கே வந்துவிட்டார். தாத்தா வரும்வரை ஒருமணிநேரம் காத்திருந்ததாக கூறுவது தவறு என்றாலும் ஊரில் உள்ளவர்களை அழைத்து சென்று புகார் கொடுத்திருக்கலாம் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது ஊரில் உள்ளவர்கள் வெட்டியவர் தெரியாது என பேசி'கொண்டார்களா என்றால் என் அத்தை என்னிடம் சொன்னார். ஊர்க்காரர்களும் எதிரிகள் இருவர் தான் மகளை காதலித்ததால் மாணிக்கராஜை வெட்டி கொன்றுவிட்டதாக சொன்னார்கள். ஊர்க்காரர்கள் சொன்னதன் அடிப்படையில் அதையே போலீசாரிடம் சொன்னோம் என்றால் சரியல்ல போலீசார் சொல்லிக் கொடுத்த அடிப்படையில் காவல் நிலையத்தில் புகாராக எழுதி கொடுத்தோம் என்றால் சரியல்ல. அத்தை சொன்னதை எழுதி கொடுத்தேன். 2 வது எதிரி வெடுக்வெடுக்கென்று பேசுவார் என்றாலும் அதனால் ஊரில் பலருக்கு அவர் மீது கோபம் உண்டு என்றால் சரிதான். என்னுடன் 2 வது எதிரி சண்டை போட்டது கிடையாது. எனக்கு அந்த விரோதம் இருக்கிறது என்றால் சரியல்ல. நான் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பொய் சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன மாணிக்கராஜ் பெண்கள் விஷயத்தில் பலவீனமானவர் என்பதால் அதனால் தான் மைனர் பெண்ணை காதலித்தார் என்றால்சரியல்ல. பெண் விசயத்தில் மாணிக்கராஜ்ற்கு விரோதம் உண்டு என்றாலும் அந்த விரோதத்தில் யாரோ மாணிக்கராஜையும், உடன் இருந்தவர் என்பதால் ரேஷ்மாவையும் கொலை செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல சம்பந்தம் இருக்கிறது. என் அத்தை ஊரில் இல்லாததால் எதிரிகள் தான்

செய்திருப்பார்கள் என்று அனுமானத்தில் என்னிடம் பேச்சியம்மாள் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல அத்தை சொன்னதை நம்பி அப்படியே சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வெட்டுபட்ட ரேஷ்மா எனது அத்தை பேச்சியம்மாளிடம் 1வது எதிரி வந்து வெட்டியதாக சொல்லியிருக்க வாய்ப்பு கிடையாது என்றாலும் அப்படி சொன்னதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

ஒம்/-எம்.பி.முருகன்
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.